## பசிலிக்கா திருவழிபாட்டு நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| திங்கள் முதல் சனி வரை | : | காலை 6.15, மாலை 6.15 மணிக்கு – திருப்பலி |
| வியாழக்கிழமை | : | முதல் வியாழன் மாலை – திருப்பலிக்குப் பின் நற்கருணை ஆராதனை |
| வெள்ளிக்கிழமை | : | மாலை – திருப்பலிக்குப் பின் இறை இரக்க நவநாள் |
| சனிக்கிழமை | : | காலை 6.15, 11.00, மாலை 6.15 மணிக்கு நவநாள், திருப்பலி மற்றும் வேண்டுதல் தேர் பவனி |
| ஞாயிற்றுக்கிழமை | : | காலை 8.00 மணி, மாலை 5.30 மணி – திருப்பலி |
| மாதத்தின் முதல் சனிக்கிழமை | : | காலை 8.00 மணிக்கு – திருப்பலி, காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணிவரை உபவாச செபவழிபாடு மற்றும் திருப்பலி |

## பசிலிக்காவின் தேர்த்திருவிழா அக்டோபர் மாதம் முதல் ஞாயிறு

- பசிலிக்கா காலை 6.00 மணிமுதல் இரவு 8.30 மணிவரை திறந்து வைக்கப்பட்டிருக்கும்.
- பசிலிக்காவில் ஒவ்வொரு நாளும் ஒப்புறவு அருட்சாதனத்தில் கலந்துகொள்ள வாய்ப்புண்டு.
- திருவிழா நாட்கள் தவிர ஆண்டு முழுவதும் எப்பொழுது வந்தாலும், தங்குவதற்கு எல்லா வசதிகளும் கொண்ட 15 அறைகள் குறைந்த கட்டணத்தில் கிடைக்கும்.
- பசிலிக்கா அங்காடியில் புனிதப் பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. வாங்கிப் பயனடையுங்கள்.
- செபமாலையே ஜெயம் என்ற பசிலிக்காவின் மாத இதழை வாங்கி அன்னையின் புகழை பரப்புங்கள்.
- “அன்னையின் அருங்காட்சியகம்” புதியதாய் அமைக்கப் பட்டுள்ளது.

### தொடர்புக்கு


பங்குத்தந்தை,
**புனித செபமாலை அன்னை பசிலிக்கா பேராலயம்**
கருமத்தம்பட்டி, கோவை 641 659
போன் : 0421-2332476
Website: www.holyrosarybasilica.org
E-mail: cberosaryshrine@gmail.com
Facebook: holyrosarybasilica
YouTube Holy Rosary Basilica


நன்கொடை வழங்க : காசோலையை / வரைவோலையை
**Parish Priest Holy Rosary Church** என்ற பெயரில் அனுப்பவும்

St. மேரி பிரிண்டர்ஸ் Opp. காந்திபார்க் ✆ 2987414, 2970439

# புனித ஜெபமாலை அன்னை பசிலிக்கா

## கருமத்தம்பட்டி




## BASILICA OF OUR LADY OF HOLY ROSARY

### பசிலிக்கா வரலாறு

- கி.பி 1640 ஆம் ஆண்டு முதலே இந்த ஆலயம் 10 கிறிஸ்துவ மையங்களின் தலைமைப் பீடமாக, பக்தர்களின் திருயாத்திரை தலமாக இருந்துள்ளது.
- 1676களில் கோட்டையை உள்ளடக்கிய பேராலயமும், கோட்டைக்கு வெளியே சிற்றாலயமும் இருந்தது.
- இந்திய திருநாட்டில் இயேசுவின் நற்செய்தியை பரப்பி தமிழகத்தின் ஓரியூர் மண்ணை இரத்தச் சிவப்பாக்கி தம்மை விதைத்துக்கொண்ட புனித அருளானந்தர் மும்முறை (1676-83) இவ்வாலயத்தில் திருப்பலி நிறைவேற்றியுள்ளார் என்பது வரலாறு.
- 1684 ஆம் ஆண்டு மைசூர் இராஜாவின் படை வீரர்களால் இந்த ஆலயம் இடிக்கப்பட்டது. பின்னர் மிக விரைவில் கட்டப்பட்டது. மீண்டும் திப்பு சுல்தானின் படை வீரர்களால் இடிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் நல்ல உள்ளம் கொண்ட கிறிஸ்தவர்கள் சிலர் அன்னையின் சுரூபத்தை எடுத்துச் சென்று மறைத்து வைத்தார்கள் ஆலயம் மீண்டும் கட்டப்பட்ட போது அன்னையின் சுரூபத்தை நிறுவினார்கள்.



- 1803 ல் தந்தை து பியுஸ் கருமத்தம்பட்டியில் புதிய ஆலயத்தை கட்டினார். அப்போதும் திப்பு சுல்தானின் அழிவிலிருந்து தப்பிய கோவிலின் நுழைவாயில் இருந்தது. 1995ல் தான் அது இடிக்கப்பட்டது.
- ஆலய மணியானது 1840ல் தந்தை J.B.பேரட் அடிகளாரின் பெருமுயற்சியால் மணிலாவிலிருந்து வரவழைக்கப்பட்டது.
- 1846 ஆம் ஆண்டு கோவை மறைமாவட்டத்தின் முதல் ஆயரான மேதகு மெல்கியோர் மரியோன் தி பிரசிலாக் இவ்வாலயத்தில் அருட் பொழிவு செய்யப்பட்டார்.
- 1857 ஆம் ஆண்டு ஆயர் மேதகு கொதல் இதே ஆலயத்தில் அருட்பொழிவு செய்யப் பட்டார்.
- இந்த ஆலயமே கோவை மறைமாவட்டத்தின் முதல் மேற்றிராசன ஆலயமாகும்.
- 1846 ஆம் ஆண்டு கோவை மறைமாவட்டத்தின் முதல் குருமடம் புனித சூசையப்பர் பெயரை தாங்கி இங்கு துவங்கப்பட்டது.
- 1908ல் லெபோன் அடிகளாரால் கட்டப்பட்ட அன்னை அருளாட்சி நடத்தும் அழகிய பீடமானது வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றது.

## பசிலிக்காவின் சிறப்புகள்

- பேராலயத்தில் உள்ள அன்னையின் திருச்சுரூபமானது நூற்றாண்டுகளை கடந்த பழமை வாய்ந்தது
- பேராலயத்தின் பீடத்தில் நற்செய்தியாளரான புனித யோவானின் திருப்பண்டம் வைக்கப்பட்டுள்ளது.
- ஆலயத்தின் முன்புற கோபுரத்தில் நமது அன்னை மரியாளின் அருளிக்கங்களை உள்ளடக்கிய செப அறை உள்ளது. இதில் அன்னை மரியாளோடு பல புனிதர்களின் திருப்பண்டங்களும் இடம் பெற்றுள்ளது.
- 1684ல் திப்பு சுல்தானின் இராணுவ வீரர்களால் இடிக்கப்பட்ட போது கிறிஸ்தவர்கள் சிலர் மறைத்து வைத்து பாதுகாத்த அன்னையின் சுரூபமானது இன்றும் வைக்கப்பட்டுள்ளது.
- அன்னையின் பல்வேறு காட்சிகளின் சுரூபங்கள், அரியவகை செபமாலைகள், திருப்பண்டங்கள் உள்ள அருங்காட்சியகம் உள்ளது.

## பசிலிக்காவின் பண்புகள்

- வரலாற்றுச் சிறப்புமிக்கதாக இருக்க வேண்டும்.
- கலைச்செறிவு இருக்க வேண்டும்.
- பல புதுமைகள் நடந்திருக்க வேண்டும்.
- மறைமாவட்ட அளவிலோ மாநில அளவிலோ தேசிய அளவிலோ சிறப்பு மிக்கதாக இருக்க வேண்டும்.
- நம்பிக்கையை வளர்க்கும் ஆலயமாக இருக்க வேண்டும்.
- உரோமை வழிபாட்டுச் சட்டங்கள் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும்.
- ஆலயக் கட்டமைப்பு பசிலிக்காவிற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.
- மாநில தேசிய ஆயர்களின் தடையில்லை சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

## பசிலிக்காவின் அடையாளங்கள்

- திருத்தந்தையின் கொடியில் காணப்படும் நிறங்கள் கொண்ட குடை
- சிறிய மணி
- திருத்தந்தையின் முத்திரையில் காணப்படும் இரண்டு சாவிகள்

## பசிலிக்காவில் விழா நாட்கள்



- உரோமையில் இவ்வாலயம் பசிலிக்காவாக அறிவித்த நாள்
- மறைமாவட்டத்தில் அறிவித்த நாள்
- திருந்தந்தை தேர்ந்தெடுக்கப்பட்ட நாள்
- திருத்தந்தையாக திருநிலைப்படுத்தப்பட்ட நாள்
- புனித பேதுருவின் தலைமைப்பீடத் திருநாள்
- புனித பேதுரு பவுல் பெருவிழா

## பசிலிக்காவில் பெற்றுகொள்ளும் ஆசிகள்

- ஆயர் குறிப்பிடும் நாளில் பசிலிக்காவைத் தரிசித்து, ஒப்புறவு அருளடையாளம் பெற்று திருப்பலியில் பங்கேற்று நற்கருணை பெற்று திருத்தந்தையின் கருத்துக்கள் நிறைவேற செபித்தால் பரிபூரண பலன் கிடைக்கும்.
- தாங்களாகவே வருடத்தில் ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து பசிலிக்காவை தரிசித்தல்.
- மேற்கூறப்பட்ட திருவிழாக்களில் ஒருநாள் பசிலிக்காவை தரிசித்து செபித்தல்.

## வரங்கள் பெற செபமாலை அன்னைக்கு சிறப்பு செபம்



துலுஸ் நகரிலே மனமுடைந்து செபித்த சாமிநாதருக்கு காட்சி கொடுத்து செபமாலை செபமே வெற்றியைப் பெற்றுதரும் என்று மொழிந்த தாயே, போராட்டங்களில் வெற்றியைப் பெற்றுத் தருபவரே, எங்கள் தாயே லூர்து நகரில் செபமாலையாடு காட்சி தந்து செபம் செய்யுங்கள், தவம் செய்யுங்கள் என்று சொன்ன மரியே, போரிலே வெற்றியைத் தேடித் தந்தவரே, உலகில் எங்கள் ஆதரவும் தஞ்சமும் , அடைக்கலமும், தாயும் நீரே என்பதைக் காண்பித்தருளும். ஆதரவற்ற எங்களை நீரே அரவணைத்து உலகம், பசாசு போன்ற மனவேதனைகளிலிருந்து எங்களைக் காப்பாற்றும், எங்கள் குறைகளைப் போக்கி, நாங்கள் கேட்கும் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து உம் திருமகனிடம் பரிந்து பேசி எங்களுக்காக இவ்வரங்களைப் பெற்றுத்தாரும். (மௌனமாக நமது தேவைகளை உருக்கமாக எடுத்துக் கூறுவோம்)

**அருள் நிறைந்த மரியே வாழ்க... (3 முறை)** வேண்டிவந்தவர்க்கு வேண்டும் வரம் தரும் செபமாலைத் தாயே, ஆபத்துக்கள், விபத்துக்கள் நோய்களிலிருந்து எங்களைப் பாதுகாத்தருளும். இறையன்பில் நாளும் வளர்ந்திட நலமும், வரமும், அருளும் பெற்றிட, நாங்கள் ஒவ்வொருவரும் உம்மோடு கூடி என்றென்றும் இறைபுகழ் பாடி அவரை வாழ்த்துவோமாக. ஆமென்.